[1978 மார்ச் 4

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) தற்சமயம் மீதம் செய்ய வேண்டிய வேலைகளுக்கு டெண்டர் ஒப்பந்தம் செய்யப்பட்டு வேலை ஆரம்பிக்க வேண்டிய நிலையில் உள்ளது.

தகரை கிராமத்தில் பாசன ஏரி.

*வினா 383.—சின்னசேலம் திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சின்னசேலம் ஒன்றியம், தகரை கிராமத்தில் சென்ற ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளின் கீழ் புதிய நீர்ப்பாசன ஏரி கட்டும் பணி தொடங்கப்பட்டு முடிவுறாமல் உள்ளதை முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

(ஆ) அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) தற்போது வேலைகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) 20·50 லட்ச ரூபாய்.

கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம்.

*வினா 384.—திரு. வி. கே. கோதண்டராமன்— திரு. க. கந்தசாமி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கூட்டுறவுச் சட்டத்தை மாற்றி அமைக்கும் விஷயமாக ஏற்படுத்தப்பட்ட கே. சந்தானம் கமிட்டியின் ரிப்போர்ட்டு எந்த ஆண்டில் வந்தது ?

(ஆ) அதில் இதுவரை எத்தனை பரிந்துரைகள் அமுல்படுத்தப் பட்டுள்ளன ?

(இ) எஞ்சியுள்ள பரிந்துரைகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) 1969 ஆம் ஆண்டு மே திங்களில் திரு. கே. சந்தானம் தலைமையில் அமைக்கப் பட்ட குழு தன் அறிக்கையைச் சமர்ப்பித்தது.